# யாழ் கொக்குவில்

# ஸ்தான சி.சி.த.க பாடசாலை

# பரிசளிப்பு விழா - 2015

காலம் : 13.10.2015 செவ்வாய்க்கிழமை

நேரம் : மு.ப 9.00 மணி

இடம் : வளர்மதி முன்பள்ளி மண்டபம்

சம்பியன் வீதி,

மாத்தனை முருகன் கோவில் அருகாமை,

கொக்குவில்.

**தலைவர் : திருமதி.யோ.திரவியநாதன்**

(பாடசாலை முதல்வர்)

**பிரதம விருந்தினர் : திரு.இலட்சுமணன் இளங்கோவன்**

(ஆளுநரின் செயலாளர், வடக்கு மாகாணம், யாழ்ப்பாணம்)

**பரிசில் வழங்கல் : திருமதி.கிருபாஹரி இளங்கோவன்**

(அதிபர் - யா/கொக்குவில் மேற்கு சி.சி.த.க பாடசாலை)

# நிகழ்ச்சி நிரல்

- பிரதம விருந்தினரை அழைத்து வரல்
- மங்கல விளக்கேற்றல்ள
- கொடி ஏற்றல்
- இறை வணக்கம்
- வரவேற்பு நடனம்
- ஆசியுரை - பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யா
- அதிபர் அறிக்கை
- பேச்சு ... தமிழ்
- பேச்சு ... ஆங்கிலம் Go to school
- பலூன் நடனம்
- காட்டினிலே கணிதம்
- காவடி ஆட்டம்
- கூட்டத்திலே கும்மாளம் ... செயற்பட்டு மகிழ்வோம்
- பிரதம விருந்தினர் உரை
- பரிசில் வழங்கல்
- எங்கள் பாடசாலை
- நன்றி உரை

## அதிபர் அறிக்கை

விக்கினங்கள் தீர்க்கும் விநாயகப் பெருமான் தாள் வணங்கி இம் மண்டபத்தின் அருகில் அருள்பாலித்துக் கொண்டிருக்கின்ற மாத்தனை வள்ளி தெய்வயானை சமேதரராக வீற்றிருக்கும் ஆறுமுகப் பெருமானை வணங்கி எல்லாம் வல்ல நயினை நாகபூசனித் தாயின் தாள் பணிந்து போற்றி வணக்கத்திற்குரிய பெரியோர்களே !

பெருமதிப்பிற்குரிய முதன்மை விருந்தினர் கௌரவ வடமாகாண ஆளுநரின் செயலாளர் திருவாளர் இலட்சுமணன் இளங்கோவன் அவர்களே ! அவர்தம் பாரியார் திருமதி கிருபாஹரி இளங்கோவன் அவர்களே !
யாழ் வலயக் கல்விப்பணிப்பாளர் அவர்களே !
பிரதிக் கல்விப்பணிப்பாளர் அவர்களே !
நல்லூர் கோட்டக்கல்விப் பணிப்பாளர் அவர்களே !
சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்களே !
பரிசளிப்பு விழாவின் அனுசரணையாளரும் பழையமாணவரும் ஓய்வு பெற்ற அதிபர் திரு மு.ஜெக்குமார் அவர்களே ! பரிசளிப்பு நிதியத்தின் ஆரம்ப நன்கொடையாளர் அமரர் சுப்பிரமணியம் பவளம் இரத்தினசபாபதி அவர்களே !
இப்பாடசாலையின் முன்னாள் அதிபர்களே ,
அயல்பாடசாலை அதிபர்களே !
இப் பாடசாலையின் ஆசிரியர்களே , பாடசாலையின் நலன் விரும்பிகளே , பாடசாலையின் அபிவிருத்திக் குழு ,அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களே , புலம்பெயர் நாட்டில் வசிக்கும் பழைய மாணவர்களே !
நலன் விரும்பிகளே ! விருந்தினர்களே !
மாணவச் செல்வங்களே ! உங்கள் அனைவருக்கும் எனது அன்பார்ந்த வணக்கம்.

பெருமதிப்பிற்குரிய பிரதம விருந்தினர் அவர்களே, எமது பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழாவிலே உங்கள் வருகை எங்கள் பாடசாலைக்கு சிகரம் வைத்து பெருமை சேர்த்து நிற்பதுடன் மிகுந்த மன மகிழ்ச்சியைத் தருகின்றது.

எங்களினது தொலைபேசி அழைப்பினூடான வேண்டிதற்கிசைந்து தாங்கள் குடும்பக சமேதரராக வருகை தந்தமையை நினைத்து ஆய்ந்து புனைந்த நல்லறிவை நாள் தோறும் புகட்டும் எம் பாடசாலை அன்னை புத்தணிகள் அணிந்து பூரித்து நிற்கின்றாள்.

இன்றைய பரிசளிப்பு நன்னாள் பாடசாலை வரலாற்றில் பொன்னாளாகும். எமது பாடசாலையின் பண்பாட்டினதும் அறிவுத்திறனினதும் நிலைக்களனாக விளங்கும் உன்னத நாள். இன்றைய விழாவிற்கு வடமாகாண கௌரவ ஆளுநரின் செயலாளர் திரு இலட்சுமணன் இளங்கோவன் அவர்களும் அவர்தம் பாரியார் அவர்களும் பிரதம விருந்தினராக வருகை தந்தமையால் பாடசாலை அன்னையின் பெருமையும் ம்கிமையும் மேன்மேலும் அதிகரிக்கின்றது. எங்கள் தெளிந்த அன்பின் காணிக்கையாக விடுத்த அன்பை புறக்கணிக்காது ஏற்றுத் தங்கள் வேலைப் பளுவின் சுமைகளுக்கு மத்தியிலும் எங்கள் பாடசாலையின் பரிசளிப்பு விழாவிற்கு பெரு விருப்புடன் வந்திருக்கிறீர்கள்.

பொன் கொட்டும் தீவு, புங்கை தீவு புங்குடுதீவாக அழைக்கப்படும் கிராமத்தின் சமய ஆசார அனுட்டானங்களையும் தமிழர் பண்பாடுகளையும் பேணிப்பாதுகாத்து சீலமும் செல்வமும் நிறைந்த இலட்சுமணன் மகேஸ்வரி தம்பதிகளுக்கு மகனாகப் பிறந்தீர்கள்.

யாழ் புங்குடுதீவு ஸ்ரீ கணேசா வித்தியாலயத்தின் ஆரம்பக்கல்வியினைக் கற்ற நீங்கள் யாழ் இந்துக் கல்லூரியில் தங்களின் உயர்கல்வியைப் பெற்றீர்கள். உயர்தரத்தில் உயிரியல் பிரிவில் கல்வியை மேற்கொண்ட தாங்கள் சென்னைப பல்கலைக்கழகத்தில் B.Sc பட்டத்தையும் தொடர்ந்து M.Sc பட்டத்தையும் பெற்றீர்கள்.

நீங்கள் 1999 ஆம் ஆண்டு நிர்வாக சேவை S.L.A.S திறந்த போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து வேலணை பிரதேச உதவி அரசாங்க அதிபராக இளம் வயதிலேயே கடமையேற்றிர்கள். தொடர்ந்து அறிவுத்திறனால் உயர்ந்து வடக்கு கிழக்கு மாகாணசபையால் திட்டமிடல் பணிப்பாளராக விளங்கி அதனைத் தொடர்ந்து கிராம அபிவிருத்தி திணைக்கள பணிப்பாளராகவும் பின் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளராகவும் அதன் பின் 2005 ஆம் ஆண்டு வடக்கு மாகாணக் கல்வி பண்பாட்டு விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளராகவும் பதவி வகித்தீர்கள். அதன் பின் வடக்கு மாகாண கௌரவ ஆளுநரின் செயலாளாகப் பணியாற்றி வருகிறீர்கள். இக்காலத்தில் தேசியமட்டத்தில் வடக்குமாகாணம் கல்வி பெறுபேறுகளிலும் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் உன்னத நிலையினை அடைய அரும்பாடுபட்டுச் சாதித்துக் காட்டினீர்கள்.

எல்லோருக்கும் நற்பணியாற்றும் தங்கள் சேவை தொடர எம் பாடசாலை சார்பில் வாழ்த்துகின்றோம்.

திருமதி கிருபாஹரி இளங்கோபன் அவர்களே ! உங்கள் வரவால் பாடசாலைச் சமூகம் பெருமிதம் கொள்கின்றது. தாங்கள் கணவரது குறிக்கோள் தவறாத பயணத்திற்கு கடமைப் பொறுப்புக்கள் கடுமையான வேளையிலும் குடும்பச் சுமைகள் வாட்டி வதைத்த வேளையிலும் வளையாது சலியாது உதவி வருகின்றீர்கள் என்பதை நான் அறிவேன். நயினாதீவை பிறப்பிடமாகக் கொண்ட தாங்கள் பிறப்பிலும் வளர்ப்பிலும் தந்தையாரின் உயர்பதவியின் ஆளுமைப்பண்புகளைக் கொண்டதோடு ஊர்பற்று மிக்க தாங்கள் எமது இணைப்பாடசாலையான யா/கொக்குவில் மேற்கு சி.சி.த.க பாடசாலையின் அதிபராக கடமையேற்று நடாத்தி வருகின்றீர்கள். தங்களின் பொற்கரங்களால் எமது மாணவர்கள் பரிசு பெறுவது எமக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகின்றது.

எங்கள் பாடசாலை அன்னையின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் பரிசில் பெறும் அனைத்து மாணவர்களுக்கும் அமரர் திருமதி கண்மணி முத்துக்குமாரு ஞாபகார்த்த பரிசளிப்புக்கான புத்தகங்களை வருடம் தோறும் வளங்கி வரும் எமது பாடசாலையின் பழைய மாணவனும் ஓய்வு பெற்ற அதிபருமான திரு மு.ஜெக்குமார் அவர்களே உங்களின் தாயின் நினைவையும் உங்களுக்கு ஆரம்ப கல்வியை வழங்கிய பாடசாலையையும் வருடாவருடம் நினைவுபடுத்தி வருகின்றீர்கள். தாங்களும் தங்கள் மனைவியும் நீண்ட காலம் ஆரோக்கியமாக வாழ்ந்து அறப்பணி செய்ய வேண்டும் என்று எல்லாம் வல்ல நயினை நாகபூசணித்தாயை பிரார்த்திக்கின்றேன்.

அன்பான பாடசாலையின் பயனாளிகளில் நலன்புரி சேவை வழங்குபவர்களே வறுமைக் கோட்டின் கீழும்,அறியாமையின் பால் அல்லல்படும் குடும்பங்களைச் சேர்ந்த 6 - 10 வயது வரையான குழந்தைகளுக்கான தரமான ஆரம்பக் கல்வியை வழங்குவதற்கு பல்வேறு வகையில் ஒத்துழைப்பு வழங்கும் வளர்மதி நிறை வாழ்வகம்,தேனிகளஞ்சிய உரிமையாளர் புலம்பெயர் நாட்டில் வாழும் பழைய மாணவர் திரு திருமதி சிவானந்தன் குடும்பத்தினர் (நோர்வே),லண்டன் அனுசரனையாளர் திருமதி கீதா ராஜ்குமார், அவுஸ்ரேலியாவில் வசிக்கும் எமது பாடசாலையின் பரிசளிப்பு நிதியத்தின் அனுசரனையாளர் திரு.தேவசகாயம் நடனகுமார், கணினி ஆசிரியருக்கான கொடுப்பனவினை வழங்கும் திரு மு.மனோகரன் ஜேர்மனி போன்றோர்களே உங்களினால் எமது பாடசாலை தரமான கல்வியை வழங்கி தரமான பெறுபேறுகளைப் பெற்று தரமான சமுகத்தினைப் படைக்க ஒத்துழைப்புப் பெற்று வருகின்றீர்கள். நீங்கள் அனைவரும் பல்லாண்டு காலம் அறப்பணி செய்து வாழ பிரார்த்திக்கின்றேன்.

எங்கள் பாடசாலையில் கடமையாற்றும் அர்ப்பணிப்பு மிக்க ஆசிரியர்களே

பிள்ளையை அறிந்து கணிப்பீட்டின் மூலம் தேர்ச்சியினை அடைவதை உறுதி செய்து, வினைத்திறனான பின்னூட்டலின் மூலம் மாணவர் அடைவ மட்டத்தினை உயர்த்த தனி நபர் மற்றும் சமூக விருத்தியை இலக்காகக் கொண்ட முறையானதும் திட்டமிடப்பட்டதுமான கற்றல் கற்பித்தல் செயல் முறையினைச் செயற்படுத்துவதற்னுகு பல்தரப்பட்ட கற்றல் ஊடகமும் உபகரணங்களும் செயற்பாடுகளையும் பயன்படுத்தி தேசிய கலைத்திட்டத்தின் ஊடாக எதிர்பார்க்கப்படும் நோக்கத்தையும் தேர்ச்சிகளையும் சகல மாணவர்களும் அடையக் கூடிய விதமாக கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளைத் தயாரித்து மாணவர்களின் சமநிலை ஆளுமை,ஆற்றல் ,அந்நியோன்னியம், ஒத்துழைப்பு, விழுமியங்கள் மற்றும் ஆக்கத்திறன்களை விருத்தி செய்யும் வகையில் இணைப்பாடவிதான செயற்பாடுகளை மேற் கொண்டு பல்வேறு நலன்புரி வேலைத்திட்டத்தின் ஊடாக மாணவர்களின் உடல் உளவிருத்தியைப் பலப்படுத்தி, சமூகத்துடன் அன்னியேன்னியமாக இயங்கி கல்வி,சமூக விருத்தியை ஏற்படுத்தி சாதனைப் பாடசாலையாக மாற்றிக் கொண்டிருக்கின்ற ஆசிரியப் பெருந்தகைகளே உங்கள் சேவையை பாதமாகப் பணிந்து ஏற்று வாழ்த்தி நிற்கின்றேன். நீங்கள் அனைவரும் நீண்ட ஆயுள் பெற்று சேவை வழங்கப் பிரார்த்தித்து நிற்கின்றேன்.

அன்பான பெற்றோர்களே உங்கள் பிள்ளைகள் பரிசில் பெறுவதைக் கண்டு மகிழ்வதற்கு வருகை தந்துள்ளீர்கள் உங்கள் வருகை மிகவும் மகிழ்ச்சியைத் தருகின்றது. பாடசாலையின் நோக்கத்தை அடைவதற்கு நீங்கள் உதவி செய்துள்ளீர்கள். உங்களுடைய பொருளாதார நிலையைக் கருத்தில் கொள்ளாமல் பாடசாலையில் பான்ட் வாத்தியக் குழுவினை உருவாக்க தரம் 3 பெற்றோர் மேற்கத்தேய் வாத்தியக் கருவிகளை வாங்கித் தந்துள்ளீர்கள். 2015 ஆம் ஆண்டிற்கான கல்விச் சுற்றுலாவிற்கு மாணவர்களை அனுப்பியும் உடன் வந்தும் தரமான கல்வியைப் பெற உதவியுள்ளீர்கள் தங்கள் பிள்ளைகளின் பிறந்த தினத்திற்கு பாடசாலையில் பூ மரக்கன்றுகளை நட்டுள்ளீர்கள். டெங்கு ஒழிப்புச் சிரமதானம் தவணை ஆரம்ப முன்னாயத்த சிரமதானம் கிராமிய பங்குபற்றல் திட்டமிடல், பெற்றோர்

சந்திப்புக்களில் கலந்து தரமான கல்வியை மாணவர்கள் பெற உதவியுள்ளீர்கள். நீங்கள் தொடர்ந்தும் கல்விக்கான ஒத்துழைப்பினை வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

யுனிசெப் ஆதரவுடன் எங்கள் பாடசாலையில் சகல மாணவர்களுக்கும் பாடசாலை மதிய உணவிற்குப் பின்னர் பல்தீட்டுவதற்குரிய பற்தூரிகை, பற்பசையினை வழங்கி பற்சுகாதாரத்தினைப் பேணுவதற்கு உதவிவழங்கி பல் வைத்தியர் திருமதி பராபரன் அவர்களுக்கும் நன்றியுடையவர்களாக இருப்பதோடு தொடர்ந்தும் சேவையாற்ற அழைக்கின்றேன்.

எங்கள் பாடசாலையில் விழுமியக் கல்வியை வளர்த்தெடுப்பதற்காக வாரம் தோறும் நற்சிந்தனை வழங்கிவரும் திருநெல்வேலி சத்தியசாயி சேவா நிறுவனத்தின் சேவையாளர்களே உங்கள் பணி தொடர வேண்டி நிற்கின்றேன்.

இப்பாடசாலையின் வளர்ச்சிக்காக உழைத்த முன்னாள் அதிபர்கள் ஆசிரியர்களை மனதில் இருத்தி 2015 ஆம் ஆண்டிற்கான அதிபர் அறிக்கையினைச் சமர்ப்பிக்கின்றேன்.

## கல்வி அபிவருத்தி நம்பிக்கை நிதியம்

கொக்குவிலைச் சேர்ந்தவரும் அவுஸ்திரேலியாவில் வசிப்பவரும் பாடசாலையின் நலன் விரும்பியுமான திரு.தேவசகாயம் நடனகுமார் அவர்களின் அனுசரணையுடன் திரு.திருமதி.சுப்பிரமணியம் பவளம் இரட்ணசபாபதி அவர்கள் வழங்கிய 100,000 ரூபாவினை ஆரம்ப வைப்பாகக் கொண்டு மக்கள் வங்கி, பல்கலைக்கழகக் கிளையில் கணக்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். இக்கணக்கின் வட்டி சேமிப்பு கணக்கில் இடப்படுகின்றது. எமது பாடசாலையின் பழைய மாணவி கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் நடன விரிவுளையாளர் செல்வி.ரஜிதா சின்னத்துரை 10,000 ரூபாவினை 2012 இல் வைப்பிலிட்டுள்ளார்.

## பாடசாலையின் 2015 ஆம் ஆண்டிற்கான செயற்திட்டத்திற்காக உதவி புரிந்தோர்

### * பாடசாலையின் கட்டட வேலைக்கான அன்பளிப்பு

1) தேனுகளஞ்சியம் - நில வேலை
2) வளர்மதி நிறை வாழ்வகம் - கூரை அமைப்பு
3) செல்வி தி.தேவராணி - ஓய்வு பெற்ற ஆசிரியர்
4) திருமதி உ. திருச்செல்வி - பழைய மாணவி பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
5) திருமதி த. தர்மரெட்னம் ஆசிரியர்
6) திரு கி.குமரேசன் - நயினாதீவு..இத்தாலி
7) சத்திவேல் ஹாட்வெயர் - இணுவில்

### * நூல் நிலையத்திற்கான புத்தக அன்பளிப்பு

❖ படிப்போம் பகிர்வோம் யா/இந்துக்கல்லூரி திரி சாரணர் குழு

### * தளபாட அன்பளிப்பு

❖ கௌரவ மாகாணசபை உறுப்பினர் விந்தன் கனகரெத்தினம்

பாலர் மேசை – 15 , **Type c** மேசை – 7

### * புலமைப் பரிசில் மாணவர்களுக்கான ஏணி புத்தகம் அன்பளிப்பு

❖ திரு ந.நித்தியானந்தன் 7 புத்தகம்

### * மாணவர்களுக்கான மதிய உணவு வழங்கியோர் விபரம்

1) திருமதி.ருக்குமணி சச்சிதானந்தம் - கனடா
2) பிறைசூடி ஆசிரியர் - அமரர் தம்பையா கணபதிப்பிள்ளை ஞாபகார்த்தம்
3) கு.நிவேதினி - நோர்வே
4) செ.மனோன்மணி - கொக்குவில்
5) டக்கி லண்டன்
6) வாசவன் ஆசிரியர் - அமரர் தம்பிராசா பூரணம் ஞாபகார்த்தம்
7) கமலினி - லண்டன்

8) இ.பஞ்சாட்சரம் - கனடா
9) தாட்சாயினி லண்டன்
10) கார்த்திகா ஆசிரியர் - அப்பா
11) சத்தியநாராயணன் ஞாபகார்த்தம்
12) ச.வித்தியா - விவசாயத் திணைக்களகம் வேலணை
13) ஆடிப்பிறப்பு அன்பளிப்பு - ம.இராசரெத்தினம்
14) சிவானந்தன் - நோர்வே
15) திரு.ச. சிவானந்தன் - நோர்வே
16) அபர்ணா - லண்டன்

* **சுற்றுலாவுக்கான அனுசரணை வழங்கியோர்**

- ❖ தேனு களஞ்சியம்
- ❖ வளர்மதி நிறைவகம்
- ❖ திரு.ச.சிவானந்தன் - நோர்வே
- ❖ தே.நடனகுமார் - அவுஸ்ரேலியா
- ❖ பெற்றோர்
- ❖ ஆசிரியர்

* **மேலைத்தேய வாத்திய அன்பளிப்பு**

- ❖ இரவீந்திரராஜா பிரவீன்ராஜ்
- ❖ சோதிநாதன் சுடரினி
- ❖ சதீஸ் சஞ்ஜை
- ❖ பாலச்சந்திரன் சுஜன்
- ❖ பிரபாகரன் பிருந்தாபன்
- ❖ ராஜ்மோகன் விதுராஜ்
- ❖ ஜெயக்குமார் மதுசன்

* **புலைமை பரிசில் வெட்டுப் புள்ளிக்கு மேல் பெற்றோருக்கான நிதி அன்பளிப்பு**

- ❖ திருமதி சிவானந்தன் நோர்வே
  அருணந்தி வேணுஜன் புள்ளி 168, ரூபா3000.00
  தேவராசா நிகேதன் புள்ளி 165, ரூபா3000.00
- ❖ திரு.வே.அன்பழகன் தலா ரூபா1000.00 வீதம்

* **புலைமை பரிசில் 100 புள்ளிக்கு மேல் பெற்றோருக்கான சுயவிபரக் கோவை அன்பளிப்பு**

- ❖ திரு.திருமதி.சந்திரநாதன்

* **பரிசில் பெறும் மாணவருக்கான பரிசில் அன்பளிப்பு**

- ❖ கண்மணி முத்துக்குமாரு ஞாபகார்த்தமாக ஓய்வு பெற்ற அதிபர் திரு மு.ஜெயக்குமார்

* **பரிசளிப்பு விழாவிற்கான நினைவூட்டல் பரிசு**

- ❖ விஜயானந்தம் டெகான்

* **பரிசளிப்பு விழா உணவு அன்பளிப்பு**

- ❖ திரு த.ஜெயக்குமார் - அமரர் கீர்த்திகன் ஞாபகார்த்தம்

* **பிறந்த தினத்தன்று மரம் நடுகை செய்த மாணவர்கள்**

- ❖ தரம் 01 பி.அபர்ணா
  சி.கம்சிகா

- ❖ தரம் 02 ஜெ.சானிலா
  ஜெ.மதுராங்கன்
  சா.துளசிகா
  ஜெ.பினுஷியன

- ❖ தரம் 03 பா.சுஜன்
  ஜெ.மதுசன்
  சு.நிகேதனன்
  இ.பிரவீன்ராஜ்

- ❖ தரம் 04 இ.கிருஷாந்

- ❖ தரம் 05 அ.வேணுஜன்
  சி.யசிக்கா
  சு.லதுசன்
  இ.பிரசாந்
  ச.துவாரகா

## பாடசாலையின் அதிபர் ஆசிரியர் விபரம்

| முழுப்பெயர் | தரம் | கல்வித் தகைமை | தொழில் தகைமை பட்டம் |
|---|---|---|---|
| திருமதி.யோகலட்சுமி திரவியநாதன் Mrs.Yogaluxmy Thiraviyanathan | S.L.T.S – I | B.COM (HONS) MED | கல்வி பின் டிப்ளோமா MED |
| திருமதி.வதனா பிறைசூடி Mrs.Vathana Piraisoody | S.L.T.S 2 - I | G.C.E(A/L) | பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி ஆசிரியர் |
| திருமதி.அனுஷா பாலமுரளி Mrs.Anusha Balamurali | S.L.T.S 2 - II | G.C.E(A/L) | கல்வியல் கல்லூரி |
| திரு.சண்முகநாதன் சுதாகரன் Mr.Shanmuganathan Suthagaran | S.L.T.S 2 - II | G.C.E(A/L) | பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி ஆசிரியர் |
| திருமதி.கார்த்திகா கமிலஸ்குணநாதன் Mrs.Karthika Kamilashkunanathan | S.L.T.S 3 - I | G.C.E(A/L) | பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி ஆசிரியர் |
| திருமதி.தயாநிதி தர்மரட்ணம் Mrs.Thayanithy Tharmaratnam | S.L.T.S 2- I | B.B.A | Dip.In.Edu |
| திருமதி.பரிமளாதேவி குருச்சந்திரநாதன் Mrs.Parimaladevi Kuruchandranathan | S.L.T.S 2- I | G.C.E(A/L) | பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி ஆசிரியர் |
| திருமதி.தவநிதி மோகனரூபன் Mrs.Thavanithy Mohanaruban | S.L.T.S 3- I | G.C.E(A/L) | பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி ஆசிரியர் |

## ஓய்வுபெற்ற ஆசிரியர்கள்

* திருமதி.வசந்தி காந்தராசா (11/01/2015)
  பயிற்றப்பட்ட ஆரம்பக் கல்வி ஆசிரியர்
* திருமதி.தேவராணி சச்சிதானந்தம் (22/08/2015)
  B.Sc, Dip in Education

## வளர்மதி நிறைவாழ்வகம் அனுசரணை

- **ஆசிரியர்கள்**
  1) செல்வி.சண்முகநாதன் சுகந்தினி G.C.E(A/L)
  2) திரு.உதயபாரதிலிங்கம் நாகரூபன் B.Sc(Hons) ICT
- **பாடசாலை உதவியாளர்**
  செல்வி வீரசிங்கம் ஜெயக்குமாரி(லதா)

## எமது பாடசாலையில் உள்ள இல்லங்கள்

- ❖ சம்பியன் இல்லம் - பச்சை
- ❖ கந்தையா இல்லம் - சிவப்பு
- ❖ ஜெயனொளிபவன் இல்லம் நீலம்

## எமது பாடசாலையிலுள்ள மன்றங்கள் மற்றும் கழகங்கள்

| மன்றங்கள் | தலைவர் | செயலாளர் | பொறுப்பாசிரியர் |
|---|---|---|---|
| இந்துமா மன்றம் | சிவசுப்பிரமணியம் யசிக்கா | தவநேந்திரா செந்தூரன் | திருமதி.அனுஷா பாலமுரளி |
| தமிழ் மன்றம் | சுபாசுந்தர் லதுஷன் | தேவராசா நிகேதனன் | திருமதி.பரிமளாதேவி குருச்சந்திரநாதன் |
| சுற்றாடல் மன்றம் | அருணந்தி வேணுஜன் | தவநேந்திரா செந்தூரன் | திரு.சண்முகநாதன் சுதாகரன் |
| கணித மன்றம் | தேவராசா நிகேதனன் | அருணந்தி வேணுஜன் | திருமதி.தர்மரட்ணம் தயாநிதி |
| ஆங்கில மன்றம் | இலங்கேஸ்வரன் பிரசாந் | தர்ஷன் கவிநாத் | திருமதி.தவநிதி மோகனரூபன் |

## பாடசாலை பெறுகைக்குழு

எமது பாடசாலையில் பெறுகைச் செயற்பாடுகள் தொடர்பாக பாடசாலை மட்டப் பெறுகைக் குழுவில் உள்ளடங்குபவர்கள்.

1. அதிபர் : திருமதி.யோகலட்சுமி திரவியநாதன் — தலைவர்
2. பிரதி அதிபர் : திருமதி.வதனா பிறைசூடி — 1ம் உறுப்பினர்
3. சிரேஸ்ட ஆசிரியர் : திரு.சண்முகநாதன் சுதாகரன் — 2ம் உறுப்பினர்

தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழு

1. பிரதி அதிபர் : திருமதி.வதனா பிறைசூடி — தலைவர்
2. சிரேஸ்ட ஆசிரியர் : திருமதி.தயாநிதி தர்மரட்ணம் — 1ம் உறுப்பினர்

ஆசிரியர் : திருமதி.கார்த்திகா கமிலஸ்குணநாதன் — 2ம் உறுப்பினர்

## பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள்

தலைவர் :- திருமதி.யோகலட்சுமி திரவியநாதன்(அதிபர்)

உறுப்பினர்கள் (பெற்றோர்) :-

1. திருமதி.ராஜினி யெச்சிறிதரன் (846694340V)
2. திருமதி.திருச்செல்வி உதயகுமார் (698040743V)
3. திரு.ப.ஜயானந்தன் (761861336V)

ஆசிரியர் பிரதிநிதிகள் :- 1. திருமதி.வதனா பிறைசூடி

2. திருமதி.தயாநிதி தர்மரட்ணம்

3. திரு.சண்முகநாதன் சுதாகரன்

வலயமட்ட பிரதிநிதி :- திருமதி.தே.மைதிலி

(உதவிக்கல்விப் பணிப்பாளர் ஆரம்பக்கல்வி)

பழைய மாணவர் சங்க பிரதிநிதிகள் :- திருமதி.ஜெ.சிவானந்தன்

திரு.மு.ஜெயக்குமார்.

## பாடசாலை அபிவிருத்திக்குழு உறுப்பினர்கள்

தலைவர் :- திருமதி.யோகலட்சுமி திரவியநாதன்(608430741V)

செயலாளர் :- பெற்றோர் பிரதிநிதி

திருமதி.ராஜினி ஜெயச்சிறிதரன் (846694340V)

பொருளாளர் :- திரு.சண்முகநாதன் சுதாகரன் (732581898V)

வலயமட்ட பிரதிநிதி :- திருமதி.தே.மைதிலி

(உதவிக்கல்விப் பணிப்பாளர் ஆரம்பக்கல்வி)

## பாடசாலைச் சுகாதாரக் குழு

**கொக்குவில் ஸ்தான சி.சி.தமிழ் கலவன் பாடசாலையின் 2015 ற்கான சுகாதாரக் குழுவினர்**

தலைவர் :- திருமதி.யோகலட்சுமி திரவியநாதன்

செயலாளர் :- திருமதி.வதனா பிறைசூடி

பொருளாளர் :- திருமதி.தயாநிதி தர்மரட்ணம்

பெற்றோர் பிரதிநிதிகள் :- தரம் 1 திரு.அ.பிரசாந்

தரம் 2 திரு.இ.ஜெயசீலன்

தரம் 3 திரு.இ.இரவீந்திரராஜா

தரம் 4 திருமதி.த.குசலகுமாரி

தரம் 5 திருமதி.உ.திருச்செல்வி

பொது சுகாதாரப் பரிசோதகர் :- திரு.K.அனுசன்

## மாணவர் சுகாதாரக் குழு

கொக்குவில் ஸ்தான சி.சி.தமிழ் கலவன் பாடசாலையின் 2015 ற்கான மாணவர் சுகாதாரக் கழக அங்கத்தவர் விபரங்கள்

தலைவர் :- செல்வன்.சபாசுந்தர் லதுஷன்

செயலாளர் :- செல்வன்.அருணந்தி வேணுஜன்

பொருளாளர் :- செல்வி.யசிக்கா சிவசுப்பிரமணியம்

வகுப்புப் பிரதிநிதிகள் :- தரம் 1 பி.அபர்ணா

தரம் 2 டி.மதுராங்கன்

தரம் 3 ச.சஞ்சை

தரம் 4 த.செந்தூரன்

தரம் 5 இ.பிரசாந்

பொறுப்பாசிரியை :- திருமதி.பரிமளாதேவி குருச்சந்திரநாதன்

## உள்ளக மதிப்பீட்டுத் திட்டம் 2015

| இல | துறைகள் | பொறுப்பாசிரியர்கள் |
|---|---|---|
| 01 | மாணவர் அடைவு | திருமதி.ப.குருச்சந்திரநாதன் |
| 02 | கற்றல் கற்பித்தல் மதிப்பீடு | திருமதி.கா.கமிலஸ்குணநாதன்<br>திருமதி.ப.குருச்சந்திரநாதன் |
| 03 | முறையான கலைத்திட்ட முகாமைத்துவம் | திருமதி.த.தர்மரட்ணம் |
| 04 | இணைப்பாடவிதான செயற்பாடுகள் | திருமதி.த.மோகனரூபன்<br>திருமதி.த.தர்மரட்ணம் |
| 05 | மாணவர் நலன்புரி | திருமதி.அ.பாலமுரளி<br>திரு.ச.சுதாகரன் |
| 06 | தலைமைத்துவமும் முகாமைத்துவமும் | திருமதி.வ.பிறைசூடி |
| 07 | பௌதீகவள முகாமைத்துவம் | திருமதி.வ.பிறைசூடி |
| 08 | பாடசாலையும் சமூகமும் | திரு.ச.சுதாகரன் |

## உலக உணவுத்திட்ட உணவுக்குழு

ஆசிரியர்கள்

1. திரு.சண்முகநாதன் சுதாகரன்
2. திருமதி.வதனா பிறைசூடி

மாணவர்கள்

1. செல்வன்.தவநேந்திரா செந்தூரன்
2. செல்வி.உதயகுமார் ரக்ஸ்மிலா

## கட்டாய வரவுக்குழு

| | | |
|---|---|---|
| தலைவர் | :- | திருமதி.யோகலட்சுமி திரவியநாதன் |
| உறுப்பினர்கள் | :- | திருமதி.வதனா பிறைசூடி |
| (ஆசிரியர்கள்) | | திருமதி.தயாநிதி மோகனரூபன் |
| | | திரு.சண்முகநாதன் சுதாகரன் |
| மாணவர்கள் | :- | செல்வன்.சுபாசுந்தர் லதுசன் |
| | | செல்வன்.இலங்கேஸ்வரன் பிரசாந் |
| உத்தியோகத்தர்கள் | :- | சண்முகநாதன் அகிலன் |
| | | (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்) |
| | | பொன்னுத்துரை சிவதாசன் (கிராம அலுவலர்) |

## பாடசாலைக்கான எதிர்காலத் தேவைகள்

1) பாடசாலைக்கான காணி
2) பாடசாலைக்கான 3 மாடி கட்டிடம்
3) விளையாட்டு முற்ற உபகரணங்கள்
4) பாடசாலைக்கான வர்ணம் பூசுதல்
5) பெண்களுக்கான சலகூடம் திருத்துதல்
6) தற்போதைய பாடசாலை கட்டிடத் தளத்திற்கு சீமெந்திடுதல்
7) பல்லூடக ஒளிப்படக்காட்டி
8) வகுப்பறைக் கற்பித்தலுக்கான மடிக்கணினி - 6
9) சங்கீத நடன ஆசிரியர்
10) காவலாளி
11) சுகாதாரத் தொழிலாளி


2015 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் மாணவர்கள் பெற்ற புள்ளி விபரம்

| இல | பெயர் | புள்ளிகள் | மாவட்ட நிலை | சித்தியடைந்தோர் |
|---|---|---|---|---|
| **01** | அருணந்தி வேணுஜன் | 168 | 350 | √ |
| **02** | தேவராசா நிகேதனன் | 165 | 479 | √ |
| **03** | சுபாசுந்தர் லதுசன் | 150 | - | - |
| **04** | விஜயானந்தம் டெகான் | 141 | - | - |
| **05** | சந்திரகுமார் சாருஜன் | 127 | - | - |
| **06** | இராசேந்திரம் ரூபினி | 120 | - | - |
| **07** | சிவசுப்பிரமணியம் யசிக்கா | 108 | - | - |
| **08** | இலங்கேஸ்வரன் பிரசாந் | 103 | - | - |
| **09** | ஜெயக்குமார் ஜெறோன் | 102 | - | - |
| **10** | சாந்தகுமார் மதுசன் | 86 | - | - |
| **11** | ஜெயக்குமார் டினுஜாந் | 75 | - | - |
| **12** | மகேஸ்வரன் கேதுசன் | 62 | - | - |
| **13** | சிவகுமார் கஜன் | 55 | - | - |
| **14** | ஜெயக்குமார் டினுஜாந் | 43 | - | - |
| **15** | உமாமகேஸ்வரன் குகனேஸவரன் | 39 | - | - |

**புலமைப்பரிசில் சித்தி வீதம் 1994 - 2015**

| வருடம் | தோற்றியோர் | 70 புள்ளிகளிற்கு மேல் | 100 புள்ளிகளிற்கு மேல் | வெட்டுப் புள்ளிக்குமேல் பெற்றோர் | மொத்த சித்தி வீதம் | புலமைப்பரிசில் நிதி பெற தகுதி பெற்றோர் வீதம் |
|---|---|---|---|---|---|---|
| **1994** | 04 | 00 | 01 | 00 | 25% | 00% |
| **1995** | 04 | 00 | 01 | 01 | 25% | 25% |
| **1996** | 04 | 01 | 00 | 00 | 25% | 00% |
| **1997** | 02 | 00 | 01 | 01 | 25% | 00% |
| **1998** | 04 | 00 | 00 | 00 | 00 | 00% |
| **1999** | 00 | 00 | 00 | 00 | 00 | 00% |
| **2000** | 04 | 04 | 00 | 00 | 100% | 00% |
| **2001** | 03 | 01 | 00 | 00 | 33% | 00% |
| **2002** | 04 | 01 | 02 | 01 | 75% | 25% |
| **2003** | 03 | 03 | 00 | 00 | 100% | 00% |
| **2004** | 06 | 03 | 01 | 00 | 66.66% | 00% |
| **2005** | 09 | 01 | 04 | 01 | 55.55% | 11% |
| **2006** | 07 | 06 | 01 | 00 | 100% | 00% |
| **2007** | 02 | 01 | 01 | 00 | 100% | 00% |
| **2008** | 02 | 01 | 01 | 01 | 100% | 50% |
| **2009** | 05 | 03 | 02 | 01 | 100% | 20% |
| **2010** | 04 | 01 | 02 | 00 | 75% | 00% |
| **2011** | 11 | 02 | 09 | 03 | 100% | 27% |
| **2012** | 10 | 01 | 06 | 01 | 70% | 10% |
| **2013** | 14 | 04 | 09 | 00 | 92.85% | 00% |
| **2014** | 11 | 05 | 06 | 01 | 100% | 9.09% |
| **2015** | 15 | 02 | 09 | 02 | 73.33% | 13.33% |

## ஆண்டு ரீதியான மாணவர் விபரம் - (2001-2015)



## பரிசளிப்பு விழா – 2015

## பரிசு பெறும் மாணவர் விபரம்

| தரம் 01 | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| இல | பெயர் | திருக்குறள் ஆத்திசூடி | சித்திரப் போட்டி | பேச்சு | சித்திரம் (சி.தினம்) | மர நடுகை | நிலை |
| 01 | லலித்குமார் மதுஷாங்கன் | | | | √ | | |
| 02 | சிவதீசன் சஞ்யை | | | | | | |
| 03 | ரவிக்குமார் கஸ்மிதன் | | | | | | |
| 04 | சிவபாலன் டிலக்ஷன் | | D√ | | √ | | |
| 05 | சிவரூபன் தனுசன் | | | | | | |
| 06 | கிருஸ்ணரூபன் கிருஷிகன் | | | | √ | | 2 |
| 07 | பிரசாந்தன் அபர்ணா | D√ | | √ | | √ | 1 |
| 08 | சதீஸ்குமார் கம்சிகா | | | | | √ | |
| 09 | விவஸ்வதமூர்த்தி குருக்கள் சாகம்பரி | | | | | | 3 |
| 10 | தவஜோதி சஜிந்தவி | | | | | | |
| 11 | விஜிந்தன் தாரணிகா | | | | | | |
| D√ - கோட்ட மட்டம் | | | | | | | |

தரம் 02

| இல | பெயர் | திருக்குறள் மனனம் | சித்திரப் போட்டி | துரித கணிதம் | பேச்சு | சிறுவர் தினம் | மர நடுகை | English Song | பொதுத்திறன் | நிலை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | சவிதாகுமார் ராகுலன் | | | | | | | √ | | 3 |
| 02 | சிவானந்தராசா கனுசன் | | | | | | | √ | | |
| 03 | ஜெயசீலன் மதுராங்கன் | | | | | | √ | √ | | |
| 04 | ஜெயச்சிறிதரன் பினுஷியன் | | | | | | | √ | | |
| 05 | தர்மராஜா சாருஷன் | விசேட பரிசு | | | | | | | | |
| 06 | சுரேஸ்குமார் சாம்பவி | D√ | | | | | | √ | √ | 2 |
| 07 | தீபன் ஹிருஷிகா | விசேட பரிசு | | | | | | | | |
| 08 | ஜயானந்தன் ஜஸ்மிகா | | | | | | | √ | | |
| 09 | ஜெயதாஸ் சானிலா | | D√ | D√ | √ | | √ | | √ | 1 |
| 10 | சாந்தகுமார் துளசிகா | | | | | | √ | | | |
| 11 | நாகராஜா டக்ஸ்சாயினி | | | | | | | | | |
| 12 | குமரேசன் அஸ்மிதா | | | | | | | | | |
| 13 | சுயித் அபிஷகிலா | | | | | | | | | |
| 14 | சுதன் மதுசாளினி | | | | | | | | | |
| 15 | கோடீஸ்வரன் சுகநிதா | | | | | | | | | |

D√ - கோட்ட மட்டம்

| தரம் 03 | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| இல | பெயர் | திருக்குறள் | சித்திரப் போட்டி | | English Song | English Reading | English H.Writting | பொதுத்திறன் | மர நடுகை | நிலை |
| 01 | சொல்லழகன் சோபிதன் | | | | | | | | | |
| 02 | ஜெயக்குமார் மதுசன் | | | | | | | √ | √ | |
| 03 | ராஜ்மோகன் விதுராஜ் | | | | | | | | | |
| 04 | சாந்தகுமார் விபிலன் | | | | | | | | | |
| 05 | சதீஸ் சஞ்ஜை | | | | | | √ | | | 3 |
| 06 | இரவீந்திரராஜா பிரவீன்ராஜ் | | | | | | √ | √ | √ | |
| 07 | பாலச்சந்திரன் சுஜன் | D√ | | | | √ | | √ | √ | 2 |
| 08 | சுரேஸ்குமார் நிகேதனன் | | | | | | | √ | √ | |
| 09 | பிரபாகரன் பிருந்தாபன் | | | | √ | | | | | |
| 10 | ரவிக்குமார் பிரணவன் | | | | √ | | | | | |
| 11 | சோதிநாதன் சுடரினி | | D√ | | | √ | | | | 1 |
| 12 | சதீஸ்குமார் அஸ்வினியா | | | | | | | | | |
| 13 | தேவஜோன்சன் கஜானா | | | | | | | | | |
| 14 | ஸ்ரீகாந்தன் நிவேதிகா | | | | | | | | | |
| 15 | சூரியகுமார் சூரியப்பிரியா | | | √ | | | | | | |
| D√ - கோட்ட மட்டம் | | | | | | | | | | |

தரம் 04

| இல | பெயர் | திருக்குறள் | சித்திரப் போட்டி | துரித கணிதம் | இசையும் அசைவும் | மர நடுகை | English Reading | English H.Writting | Poem | English Song | நிலை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | தேவஜோன்சன் தனுசன் | | | | | | | √ | | √ | |
| 02 | அன்ரன் கமலராஜன் பாதுசன் | | | | | | | | | √ | |
| 03 | இராசேந்திரம் கிருசாந் | | | | | √ | | | | √ | |
| 04 | தர்சன் கவிநாத் | | | | | | | | √ | | |
| 05 | தவநேந்திரா செந்தூரன் | D√ | | D√ | | | √ | √ | | √ | **1** |
| 06 | ராஜா திலக்ஸன் | | | | | | | | | | |
| 07 | சுரேஸ்குமார் திஷானன் | | | | | | | | | | |
| 08 | தாசன் சாம்சன் | | | | | | | | | | |
| 09 | ஜெயராசா கனிமதி. | | Z√ | | | | | | | √ | **2** |
| 10 | உதயகுமார் ரக்ஸ்மிலா | | | | D√ | | | | √ | √ | **3** |

D√ - கோட்ட மட்டம், Z√ - வலய மட்டம்

| இல | பெயர் | தமிழ் வாசிப்பு | தமிழ் எழுத்து | பாவோதல் | நுண்ணறிவு | திருக்குறள் | சித்திரம் | துரித கணிதம் | மர நடுகை | English Reading | English H.Writting | Recitation | நிலை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | தரம் 05 | | | | | | | | | | | | |
| 01 | தேவராசா நிகேதனன் | | | | D√ | D√ | | D√ | | √ | | | 1 |
| 02 | அருணந்தி வேணுஜன் | | D√ | | D√ | | D√ | | √ | √ | √ | | 2 |
| 03 | மகேஸ்வரன் கேதுசன் | | | | | | | | | | | | |
| 04 | ஜெயக்குமார் ஜெரோன் | | | | | | | | | | | | |
| 05 | விஜயானந்தம் டெகான் | D√ | | | D√ | | | | | | | | |
| 06 | சிவகுமார் கஜன் | | | | | | | | | | | | |
| 07 | சந்திரகுமார் சாருஜன் | | | | | | | | | | | | |
| 08 | உமாமகேஸ்வரன் குகனேஸவரன் | | | | | | | | | | | | |
| 09 | இலங்கேஸ்வரன் பிரசாந் | | | | D√ | | | | √ | | | √ | |
| 10 | சுபாசுந்தர் லதுசன் | | | D√ | D√ | | | | √ | | | √ | 3 |
| 11 | சாந்தகுமார் மதுசன் | | | | | | | | | | | | |
| 12 | ஜெயக்குமார் டினுஜாந் | | | | | | | | | | | | |
| 13 | சந்திரசேகரம் துவாரகா | | | | | | | | √ | | | | |
| 14 | இராசேந்திரம் ரூபினி | | | | | | | | | | | | |
| 15 | சிவசுப்பிரமணியம் யசிக்கா | | | | | | | | √ | | | | |

D√ - கோட்ட மட்டம்

## வங்கிக் கணக்கு இலக்கங்கள்

| | கணக்கின் பெயர் | வங்கியின் பெயர் | கிளையின் பெயர் | கணக்கு இலக்கம் |
|---|---|---|---|---|
| 1 | சம்பளக்கணக்கு | B.O.C | MainBranch | 0001093420 |
| 2 | பாடசாலை அபிவிருத்திக்குழு | B.O.C | Kokuvil | 75809543 |
| 3 | ஏனைய கணக்குகள் கல்வி அபிவிருத்தி நம்பிக்கை நிதியம் | People's Bank | Thirunelvely | 162-60-0100003648-2 |
| | கல்வி அபிவிருத்தி நம்பிக்கை நிதியம் சேமிப்புக்கணக்கு | People's Bank | Thirunelvely | 162-2-001-0-0040208 |

## மாணவர்களுக்கான சேமிப்புக் கணக்கு பாடசாலை வங்கிச்சேவை


1. மக்கள் வங்கி – திருநெல்வேலி
2. தேசிய சேமிப்பு வங்கி – கொக்குவில் அஞ்சலகம், திருமதி.வதனா பிறைசூடி
3. இலங்கை வங்கி – கொக்குவில்
4. செலான் வங்கி – யாழ்ப்பாணம்

## நிகழ்வின் நிழல்கள் 2015

* பிறந்ததின மரம் நடுகை


















* கால்கோள் விழா

* பொங்கல் விழா


* திருமதி.வசந்தி காந்தராசா ஆசிரியை அவர்களின் சேவை நயப்பு விழா






* ஆசிரியை திருமதி.கார்த்திகா கமிலஸ்குணநாதன் அவர்களின் பிறந்ததின நிகழ்வு





* புதுவருடக் கொண்டாட்டம்






* திருவள்ளுவர் குருபூசைதின நிகழ்வு





* இல்ல செற்பட்டு மகிழ்வோம்



* சூரிய நமஸ்காரம், தியானம் மூச்சுப் பயிற்சியுடன் சத்துணவு வழங்கும் நிகழ்வு





* இலவச மருத்துவ முகாம்





* டெங்கு ஒழிப்பு சிரமதான நிகழ்வு (மாணவர்கள், பெற்றோர், இராணுவத்தினர்)



* உலக சுகாதார ஸ்தாபனத்தின் அனுசரணையுடன் நடைபெற்ற தரம் 1 மாணவர்களுக்கான பற் சுகாதார நிதழ்வு



* மாதிரி சந்தை




* மும்மொழிகள் பயிற்சிக் கையேடு வழங்கல்




* திருமதி.தே.தியாகராசா ஆசிரியை அவர்களின் சேவை நயப்பு விழா





* மாணவர்களுக்கான மூக்குக் கண்ணாடி வழங்கல்






* கிராமிய பங்குபற்றலுடனான அணுகுமுறை(PRA)






* போதைப் பொருள் தடுப்பு தொடர்பான விழிப்புணர்வு





* கிராமிய பங்குபற்றலும் போதைப் பொருள் தொடர்பான விழிப்புணர்வும்





* ஆடிப்பிறப்புக் கொண்டாட்டம்







* படிப்போம் பகிர்வோம்





* பல்சமய கலாசார நிகழ்வு

* இயற்கை அனர்த்தங்கள் தொடர்பான கலந்துரையாடல்





* சிறுவர் முதியோர் தினம்






* கல்விச் சுற்றுலா





















* ஆசிரியர் தினம் மற்றும் மேலைத்தேய வாத்திய கையளிப்பு








## யாழ் கொக்குவில் ஸ்தான சி.சி.த.க பாடசாலை

மகுட வாசகம் - "கல்வியே அழியாத செல்வம்"

### பாடசாலைக் கீதம்

இராகம் - கல்யாணி

தாளம் - ஆதி

கல்விச் சுடரினை ஏற்றுவோம் ~ நாங்கள்

கல்விப் பேறினை எம்வாழ்வில் போற்றுவோம்

யாழ் கொக்குவில் ஸ்தான சி.சி.த.க பாடசாலை

எம் கல்வி அன்னையே என்றும் வாழ்க – பாலர்கள்

நாங்கள் விருப்புடன் கற்றிடும் கல்விக்கதிபதி எம்முடன் வாழ்க

எம்மையணைத்து கல்விப் பயிர் வளர்த்து

சான்றோனாக்கும் தாயே வாழ்க

ஆடிப்பாடி மகிழ்கிறார் குழாத்துடன்

ஆசிரியம் திகழ் ஆசான் மகிழ்வுடன்

கலைகளின் வையகம் புகழ்ந்திட என்றும்

எம் கல்வியே அழியாத செல்வம்

ஆக்கியவர் – திரு.ந.பரந்தாமன்

இசைமாணி யாழ் பல்கலைக்கழகம்

விரிவுரையாளர்.

இசையமைத்தவர் – திருமதி.பிறேமினி சபேசன்

## நன்றி நவிலல்

எமது பாடசாலையின் பரிசளிப்பு விழாவிற்கு பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்த கௌரவ வடமாகாண ஆளுநரின் செயலாளர் திருவாளர் இலட்சுமணன் இளங்கோவன் அவர்களிற்கு முதற்கண் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இவ்விழாவிலே ஆசியுரை வழங்கிய சுவாமி பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யா அவர்களிற்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மற்றும் மாணவர்களிற்கான பரிசில்களை வழங்கி கௌரவித்த திருமதி.கிருபாஹரி இளங்கோவன் அவர்களிற்கும் எனது உளம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எமது விழாவை தங்களுடைய மண்டபத்தில் நடாத்த அனைத்து ஒத்துழைப்புக்களையும் வழங்கி உதவிய வளர்மதி நிறைவாழ்வகத்தினருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எமது இன்றைய விழாவிலே இடம்பெற்ற கலை நிகழ்வுகளை குறுகிய காலத்தில் பயிற்றுவித்த ஆசிரியர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அடுத்து இன்றைய பரிசளிப்பு விழா சிறப்புற நடைபெற பரிசில்களை வழங்கியவர்களிற்கும் இவ்விழாவில் கலந்து சிறப்பித்த அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மற்றும் இன்றைய விழாவிலே அரங்கேற்றம் பெற்ற எமது பாடசாலையின் மேலைத்தேய வாத்தியத்தினை மிகக் குறுகிய காலப்பகுதியிலே (4 நாட்கள்) மாணவர்களுக்கு பயிற்றுவித்த செல்வி பவந்தினி கதிரேசபிள்ளை அவர்களுக்கு எனது உளம் கனிந்த மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இவ் விழா மலரினை வடிவமைப்பதற்கு தட்டச்சு உதவி புரிந்த திருமதி.வசந்தி தர்மராசா அவர்களுக்கும் மற்றும் இம் மலரினை சிறப்புற வடிவமைத்த எங்கள் பாடசாலையின் கணினி ஆசிரியர் திரு.நாகரூபன் அவர்களுக்கும், விழா அழைப்பிதழினை வடிவமைத்து அச்சிட்டுத்தந்த பராசக்தி பிறிண்டேர்ஸ் நிறுவனத்தாரிற்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் இன்றைய பரிசளிப்பு விழாவில்கலந்து கொண்டு விழாவினைச் சிறப்பித்த விருந்தினர்களிற்கும் மாணவர்களிற்கும் ஆசிரியர்களிற்கும் மற்றும் சிற்றுண்டி, மதிய உணவு வழங்கியதோடு விசேட பரிசு என்பவற்றை வழங்கியோருக்கும் 2015 ஆண்டிற்கான பாடசாலை செயல்திட்டத்திற்கு உதவியோருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இறுதியாக இவ்விழா சிறப்புற நடைபெற அனைத்து விதத்திலும் தோளோடு தோள் நின்று செயலாற்றிய அனைத்து நல் உள்ளங்களிற்கும், எமது பாடசாலையின் பயனாளிகளுக்கும், இத்தருணத்தில் யாருக்காவது நான் நன்றிகூறத்தவறியிருப்பின் அவர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளை மீண்டும் மீண்டும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி வணக்கம்

அதிபர்

யாழ் கொக்குவில் ஸ்தான சி.சி.த.க பாடசாலை

# வாய்விட்டுக் கேளுங்கள்...! மனம் விட்டுப் பேசுங்கள்...!

உறவுகளானாலும் சரி, நட்புகளானாலும் சரி மனம் விட்டுப் பேச முடிந்த அளவு மட்டுமே ஆழப்படுகின்றன. பலம் பெறுகின்றன. மனம் விட்டுப் பேசுவது நின்று போகுமானால் அனுமானங்களும், சந்தேகங்களும் நிஜங்களின் இடத்தைப் பெற்றுக் கொண்டு எல்லாவற்றையும் நிர்ணயம் செய்ய ஆரம்பித்து விடுகின்றன. பின் அந்த உறவுகளில் விரிசல் விழுகின்றன; நட்புகள் துண்டிக்கப்படுகின்றன.

எதையும் தவறாகப் புரிந்து கொள்ளுவதும், தவறாக ஆக்கி விடுவதும் சுலபம். சந்தேகக் கண்ணாடியை வைத்துப் பார்க்கும் போது எதற்கும் எத்தனை தப்பர்த்தங்களும் நம்மால் காண முடியும். இந்த முட்டாள்தனத்தில் பலியாவது உறவுகளும், நட்புகளும்,சந்தோஷங்களும் தான்.

புரியாத போது வாய் விட்டுக் கேளுங்கள். முரண்பாடாக நடந்து கொள்வதாகத் தோன்றும் போது ஏன் என்று வெளிப்படையாகக் கேளுங்கள். நீங்களாக அனுமானிக்காதீர்கள். அதே போல் நீங்களும் வழக்கத்திற்கு மாறாக நடந்து கொள்வீரகளேயானால் ஏன் என்பதை தெளிவுபடுத்துங்கள். அவர்களுக்குப் புரியும் என்று நீங்களாக நினைத்துக் கொள்ளாதீர்கள்.

தவறு என்று நினைப்பதை உங்கள் குடும்பத்தினரிடமும் சரி, நண்பர்களிடமும் சரி கண்டிப்பாகத் தெரிவியுங்கள். அதைக் கேட்டு அவர்கள் சொல்லும் காரணங்கள் நியாயமானவையாகக் கூட இருக்கலாம்.

அப்படியில்லையென்றாலும் நீங்கள் சொன்ன பிறகு தவறு என்பதைப் புரிந்து அவர்கள் திருத்திக் கொள்ளவோ, மீண்டும் அப்படிச் செய்யாமலிருக்கவோ வாய்ப்புகள் உள்ளன அல்லவா? இப்படி அவ்வப்போதே சரி செய்து கொள்ள வாய்ப்புகள் ஏற்படுத்திக் கொள்வது மனம் விட்டுப் பேசுவதாலேயே சாத்தியமாகிறது. அப்படிச் செய்யாமல் போகும் போது லேசாக எழும் விரிசல் அதே போன்ற தொடர் செய்கைகளால் பெரிதாகிக் கொண்டே வந்து பிரிவினையையே ஏற்படுத்தி விடுகிறது.

எனவே நீண்டநாள் ஆழமான நட்பும், உறவும் நீடிக்க வேண்டுமானால் இந்த தாரக மந்திரத்தை மறந்து விடாமல் கடைபிடியுங்கள்- வாய் விட்டுப் கேளுங்கள். மனம் விட்டுப் பேசுங்கள்.

அனுதினமும் ஆனந்தமாய் வாழ்ந்திட வாழ்த்துக்களோடு, இன்றைய பொழுது இனிய பொழுதாக அமையட்டும்...!!!